Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 72 நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்;நீரே என் தேவன் என்று சொன்னேன் சங்.31:14. பெப்ரவரி 2026 No.2

ஆண்டவரே! உமது ஆவியால் நிரம்பி வழியும் மட்டும் எங்களை நிரப்பும்

Lord, Fill us to overflowing with your spirit

Rich Carmicheal

தூய ஆவியானவரின் நபரத்துவம் மற்றும் அவரது ஊழியம் ஆகியவற்றையும் நமது வாழ்வில் அவரது பிரசன்னம் வல்லமை ஆகியவை நமது வாழ்வின் மூலம் ஏற்படுத்தும் என்பதையும் கவனிப்பது ஆசீர்வாதமானது. அவரது தாக்கம் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதோடு, பாவ உணர்வை ஏற்படுத்தி அதிலிருந்து விடுதலை தந்து, ஆவிக்குரிய சத்தியங்களுக்குள் வழி நடத்தி, கிறிஸ்துவைப் போல தூய்மையாய் வாழச்செய்து, நம்மைப் புதுப்பித்து, ஆவிக்குரிய வாழ்வால் நிரப்பி வழிந்தோடச் செய்து, நம்மை அபிஷேகித்து, தைரியப்படுத்தி, ஊழியத்தில் பயனுள்ளவர்களாக்கி, ஜெபத்தில்வழிநடத்தி, வலுப்படுத்தி, அன்பு, சந்தோஷம், சமாதானம் போன்ற கனிகளை உருவாக்கச்செய்கிறார்.

D.L. முடி எழுதிய "சேவைக்கான ஆவியின் வல்லமை" என்ற தலையங்கத்தில் அவர் மனதைக் கவரும் ஒரு காட்சியை நமது வாழ்வில் ஆவியானவரின் சத்துவம் என விவரிக்கிறார். "ஜீவ தண்ணீரால் நிரப்பப்பட்ட ஒருவரை காண விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்கள் அவர்களால் அடக்கிக்கொள்ளக் கூடாமல் வெளியே சென்று தேவனது கிருபையின் சுவிசேஷத்தை பறைசாற்றுவார்கள்". நம்மில் தேவனுடைய ஆவியானவர் தங்கி இருக்க வேண்டும். அப்போது உலகத்தின் மேலும் மாம்சத்தின் மேலும் பிசாசின் மேலும் வெற்றி பெற முடியும். அவர் பரலோக அளவு "அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி"யான அளவு என ஞாபகப்படுத்துகிறார் லூக்.6:38. உங்களிடம் இந்த நிறைவு இருக்கிறதா? இல்லையென்றால் அதைத் தேடுங்கள் தேவகிருபையால் நீங்கள் பெறலாம். ஏனெனில் அவர் எல்லாவற்றையும் கொடுக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஆன்ட்ரூ முர்ரே என்பவரும் ஆவியானவரின் விலையேறப்பெற்ற பணிகளைக் குறிப்பிடுகிறார். "தூய ஆவியானவர் பிதா குமாரன் என்பவர்களுடைய ஆவியாக வந்தார். இந்த தெய்வீக தன்மைக்கு நம்மைப் பங்காளிகளாக்கி, தேவ அன்பை நமது உள்ளங்களில் பரவச் செய்து அதன்மூலம் நம்மில் வாசம் செய்யும் குமாரனுடைய அன்பு பிதா வினுடைய அன்பு இவற்றை இருதயங்களில் அதிகமாக கிறிஸ்து நமக்குள் உருவாகவும், நமது உள்ளான மனுஷன் மாற்றப்பட்டு தேவனுடைய சாயலைப் பெறமுடியும்". தெய்வீகத் தன்மைக்கு நாம் பங்காளிகளாவதும், தேவ அன்பு நம்மில் ஊற்றப்பட்டு அது சுற்றிலும் நம்மை கிறிஸ்துவின் சாயலாக்குவதும் எவ்வளவு மகிமையான கிரியை!

உங்கள் வாழ்வில் இத்தகைய கிரியையை நீங்கள் வாஞ்சிக்கிறீர்களா? உங்களிலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடவேண்டாமா? சுயத்தையும் பாவத்தையும் மேற்கொண்டு வெற்றியோடு வாழவேண்டாமா? பிறருக்கு சாட்சியாய் வாழ்வதில் வல்லமையும் தைரியமும் வேண்டாமா? ஆவியின் கனிகளால் நிரப்பப்பட வேண்டாமா? கிறிஸ்துவைக் குறித்தும் அவரது மகிமையைக் குறித்தும் அதிக வெளிப்படுத்தல் வேண்டாமா?

தாகத்தோடு ஜெபியுங்கள்

இவைகளை நீங்கள் வாஞ்சித்தால் சரியான தடத்தில் செல்ல வேண்டும். இயேசு: "ஒருவன் தாகமாயிருந்தால், என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" என்று அழைத்தார் யோவா.7:37. **D.L. முடி** அவர்கள் தாகத்தைக் குறித்து: "சபையிலுள்ள அனேகர் இன்று பாலைவனத்தைப் போல் இருக்கிறார்கள். இலைகளெல்லாம் காய்ந்து ஜீவனற்றிருக்கிறது. அவர்கள் ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு மனிதனின் அருகில் இருக்கலாம். ஆனால் அவர்கள் இத்தகைய ஆசீர்வாதங்களை தேடுவதில்லை. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? தாகமுள்ளவன் மேல் தேவன் தண்ணீரை ஊற்றுகிறார். அபிஷேகத்தினை விரும்புகிறவன் அதைப் பெற்றுக்கொள்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக இதை நாடினால், தேவன் நமக்கும் இந்த ஆசீர்வாதத்தைத் தருவார்.

எனவே, ஆவியால் நிரப்பப்படுவதற்குத் தாகம் மிகவும் முக்கியமானது. குறிப்பான ஜெபத்தோடு கர்த்தரைத் தேட வேண்டும். இயேசு தமது சீஷர்களுக்கு அளித்த அறிவுறுத்தலைப் பாருங்கள். "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன்; நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" லூக்.24:49. அவர் கூறியதை சீஷர்கள் அப்படியே மனதிற்கொண்டு அவர் பரத்திற்கு எழுந்தருளிப்போன பின்பு மேல் வீட்டறையில் கூடி "... ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" அப்.1:14. பெந்தெகொஸ்தே நாளில் தனது வாக்குப்படி தமது ஆவியை அவர்கள் மேல் ஊற்றும் வரை அவர்கள் காத்திருந்து ஜெபித்தார்கள். அப்போது அவர்கள் வாழ்வு தேவ அன்பு, வல்லமை, தைரியம் ஆகியவற்றால் நிரம்பி, சபை அதிசயமாய் வளரத் தொடங்கியது. அவர்கள் தொடர்ந்து ஜெபித்த போது (2:42; 4:31) ஆண்டவரும் தமது ஆவியால் தொடர்ந்து அவர்களை ஆசீர்வதித்து வலுப்படுத்தினார்.

ஆண்டவர் தமது ஆவியை ஊற்றுவதற்கு உத்தமராகவும் ஆவலாகவும் இருப்பதற்கு நாம் ஜெபிக்க வேண்டாமா? ஆண்டவராகிய இயேசு இவ்வாறு நினைப்பூட்டுகிறார்: "மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" லூக்.11:9-10. தொடர்ந்து "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்" லூக்.11:13. நாம் பாரத்தோடு ஆவியானவரின் நிறைவு நமது வாழ்வை நிரப்ப ஜெபிப்போம்.

மேலும் அதிக விசுவாசத்தோடு ஜெபிப்போம். ஆண்டவருடைய சித்தம் நாம்தூய ஆவியால்நிரப்பப்பட வேண்டும் என்பதுதான். "வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கரத்தர் வர வழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" அப்.2:39. 'ஆவியினால் நிறைந்து' எபே.5:18. எனவே நாம் மிகுந்த எதிர்பார்ப்போடு ஜெபிக்கலாம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச்

(4-ம் பக்கம் பார்க்க)

உள்ளே...
பலிபீடத்தின் மேல்
அக்கினி

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

2 நாளாகமம் 7:14

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் சங்கீதம் 50:15.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2026 பெப்ரவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

வாசகர் கடிதம்

Praise the Lord

பண்டாரவிளை, 30-11-25

தேவ ஊழியர் ஐயா அவர்களின் சமுகத்திற்கு பணிவான வணக்கம். சுகம், சுகத்தை விரும்புகிறேன்.

வருகையின் தூதன் பெற்று, படித்து பயனடைந்து வருகிறோம். தங்களுக்காக ஜெபிக்கிறேன். எனக்கு மூட்டு வலி சற்று அதிகமாயிருக்கிறது. கடிதம் கிடைத்ததும் எனக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். 82 வயது நடந்துகொண்டிருக்கிறது.

தங்களுக்காகவும், தங்களின் ஊழிய பணிகளுக்காகவும் ஜெபிக்கிறேன். V.M.B.B.

* ---- * ---- *

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு,

இத்துடன் வருட சந்தா அனுப்பியுள்ளேன். எனக்கு வயது 83. என் குடும்பத்திற்காக ஜெபிக்கவும், நன்றி.

P.J., C.N 01086

இந்தியா இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்

(மாதம் முழுவதும் 31 நாட்களும் ஜெபிப்பதற்காக **ஜெப கையேடு** அச்சிட்டு வருகிறோம். அதில் அச்சிப்பட்டுள்ள 31 ஜெபக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் வெளியிடுகிறோம்)

தேதி 2

அருணாச்சல பிரதேசம் (Arunachal Pradesh)

ஜெபியுங்கள் : முதலமைச்சர், அமைச்சர்களுக்காக, M.P., M.L.A., IAS, IPS அதிகாரிகளுக்காக, நீதித்துறை, காவல்துறை, வழக்குரைஞர்களுக்காக, ஆளுநர், மாவட்ட ஆட்சியர்களுக்காக.

2011 மக்கள் தொகை	: 13,83,727
2025 கணிக்கப்பட்டதொகை	: 1.89 கோடி
மாவட்டங்கள்	: 28
கிராமங்கள்	: 5,589
2011 கிறிஸ்தவர்கள்	: 30.26%
2025 கிறிஸ்தவர்கள்	: 40%

2026 **இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் மாற்கு 9:23.**

மக்கள் இனங்கள் : டாஃப்லனா, ஆதி, மோன்பா, மிங்கி, அபதானி, டாகின், மஷ்மி, காலோ, சிங்போ, காம்ப்டி, நாகா

ஜெபக்குறிப்புகள்:

1. மதமாற்றத் தடைச்சட்டம் நீங்கத்தக்கதாக ஜெபிப்போம்.
2. முன்னோர்களின் ஆவிகளை தெய்வமாக வணங்கும் பழங்குடியினர் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
3. கிறிஸ்தவ ஊழியர்களுக்குள் ஒற்றுமை நிலவ ஜெபிப்போம்.

விசேஷ ஜெபக்குறிப்பு

நூதனமான கொடிய பாவங்கள் நிறைந்த இந்த கடைசி நாட்களில் தற்போது இந்தியாவில் பள்ளி மாணவிகளிடையே கர்ப்பம் தரிப்பது என்பது நாகரீகமாக மாறி வருகிறது. இந்தியாவின் முக்கிய நகரங்களில் மட்டும் வருடத்திற்கு சுமார் 4.4 மில்லியன் மாணவிகள் (வயது 10-19) கருக்கலைப்பு செய்வதாக சர்வே எடுத்திருக்கிறார்கள். இதில் டெல்கி, மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தா மாணவிகளே அதிகம்.

கலாச்சாரமும், பாரம்பரியமும் வழிந்தோடும் இந்திய தேசத்தில் இதுபோன்ற பாவ செயல்களின் அதிகரிப்பு வேதனைக்குரிய விஷயமாக உள்ளது. குறிப்பாக, மாணவிகள் தங்கள் சம வயதுள்ள ஆண் நண்பர்களுடன் பேசி நட்பு கொள்வதை பெரிதாக மதிக்கின்றனர். அவர்களுடன் தனிமையில் பேச, வெளியே செல்ல விரும்புகின்றனர். இப்படி செல்லும்போது வரம்பு மீறி பாவ செயல்களில் ஈடுபட்டு, மாணவிகள் கர்ப்பம் அடைகின்றனர். ஆனால், அதுகுறித்த வெட்கமோ, பயமோ அவர்களிடம் கொஞ்சமும் இல்லை. உடனடியாக மருத்துவரையோ, மாத்திரையையோ நாடி கருக்கலைப்பு செய்கின்றனர்.

2024-25-ம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 9 லட்சம் கருக்கலைப்புகள் நடந்துள்ளன. இதைத் தவிர ஆயிரக்கணக்கில் மறைமுகமாக கருக்கலைப்புகள் நடந்துள்ளன. 2025-ம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 16.6 மில்லியன் கருக்கலைப்பு நடந்துள்ளது. 15-49 வயதுடைய 1000 பெண்களில் 48 பெண்கள் கருக்கலைப்பு செய்கிறார்கள். வளர்ந்து வரும் நமது தேச வாலிப சமுதாயம் விபச்சார பாவத்தில் சோதோம், கொமரா பட்டணங்களுக்கு இணையாகி தேவனுடைய கோபாக்கினைக்கு உள்ளாகிவிடாமல் தேவன் தடுத்து நிறுத்த ஜெபிப்போம்.

சிறப்புச் செய்தி

7 அக்கினி

பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்பு கிறேன் லூக்கா 12:49.

II. பலிபீடத்தின் மேல் அக்கினி

1. கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு, அவனை நோக்கி:

நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால், மாட்டுமந்தையிலாவது, ஆட்டு மந்தை யிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலி செலுத்த வேண்டும்.

அவன் செலுத்துவது மாட்டுமந்தையிலிருந்து எடுக்கப் பட்ட சர்வாங்க தகனபலியானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவானாக; கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கிகரிக்கப்படும்படி, அவன் அதை ஆசரிப்புக் கூடார வாசலில் கொண்டுவந்து,

அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும் படி தன் கையை அதின் தலையின்மேல் வைத்து,

கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக்கொல்லக் கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

பின்பு அவன் அந்தச் சர்வாங்க தகனபலியைத் தோலுரித்து, அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கக்கடவன்.

அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் *பலிபீடத்தின்மேல் அக்கினியைப்* போட்டு, *அக்கினியின்மேல்* கட்டைகளை அடுக்கி,

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் குமாரராகிய ஆசாரியர்கள், துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் *பலிபீடத்திலுள்ள அக்கினியில்* இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக் கடவர்கள்.

அதின் குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக; இவைகளையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகன பலியாகத் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி லேவி.*1:1-9.*

2. *பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:*

நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கற்பிக்கவேண்டிய சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் என்னவென்றால், சர்வாங்க தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் பலிபீடத்தின்மேல் எரிய வேண்டும்; *பலிபீடத்தின் மேலுள்ள அக்கினி* எரிந்து கொண்டே இருக்கவேண்டும்.

ஆசாரியன் தன் சணல் நூல் அங்கியைத் தரித்து, தன் சணல் நூல் ஜல்லடத்தை அரையில் போட்டுக்கொண்டு, *பலிபீடத்தின்மேல் அக்கினியில்* எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்துப் பக்கத்தில் கொட்டி,

பின்பு தன் வஸ்திரங்களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய்க் கொட்டக்கடவன்.

பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும்; ஆசாரியன் காலைதோறும் அதின்மேல் எரியும்படி கட்டைகளைப் போட்டு, அதின்மேல் சர்வாங்க தகன பலியை வரிசையாக வைத்து, அதின் மேல் சமாதானபலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கக்கடவன்.

பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும்; அது ஒருபொழுதும் அவிந்துபோகலாகாது லேவி.*6:8-13.*

1. பலிபீடத்திலென்னைப் பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருசித்தம்போல
ஆண்டு நடத்திடுவீர்
கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை
2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னைக்
காத்துமக்காய் நிறுத்தி
3. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர்வதித்தருளும்
4. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம்பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர்
5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால்

3. எட்டாம் நாளிலே மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து,

ஆரோனை நோக்கி: நீ பாவநிவாரணபலியாகப் பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், சர்வாங்க தகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் தெரிந்து கொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் பலியிடக்கடவாய்.

மேலும் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் பலியிடும்படிக்கு, நீங்கள் பாவநிவாரண பலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக் கடாவையும், சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும்,

சமாதானபலிகளாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த போஜன பலியையும் கொண்டுவாருங்கள்; ***இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனமாவார்*** என்று சொல் என்றான்.

மோசே கட்டளையிட்டவைகளை அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். சபையார் எல்லாரும் சேர்ந்து, கர்த்தருடைய சந்நிதியில் நின்றார்கள்.

அப்பொழுது மோசேகர்த்தர்கட்டளையிட்ட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; ***கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும்*** என்றான் லேவி.*9:1-6.*

பின்பு ஜனங்களின் சமாதானபலிகளாகிய காளையையும் ஆட்டுக்கடாவையும் கொன்றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவன் அதைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

காளையிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய ஜவ்வையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின் மேல் இருந்த ஜவ்வையும் கொண்டுவந்து,

கொழுப்பை மார்க்கண்டங்களின் மேல் வைத்தார்கள்; அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனித்தான்.

மார்க்கண்டங்களையும் வலது முன்னந்தொடையையும், மோசே கட்டளையிட்டபடியே, ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான்.

பின் ஆரோன் ஜனங்களுக்கு நேராகத் தன் கைகளை உயர்த்தி, *அவர்களை ஆசீர்வதித்து*, தான் பாவநிவாரண பலியையும், சர்வாங்க தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்தின இடத்திலிருந்து இறங்கினான்.

பின்பு *மோசேயும் ஆரோனும்* ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசித்து, வெளியே வந்து, *ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது.*

அன்றியும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்து விட்டது; ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆர்ப்பரித்து முகங்குப்புற விழுந்தார்கள் அல்லேலூயா! லேவி.9:18-24.

ஆசீர்வாதம்

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.

கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன் மேல் கிருபையாயிருக்கக்கடவர்.

கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் எண். 6:24-26.

உங்கள் சகோதரன்,
Mobile: **95432 21008** **வெஸ்லி தேவதாசன்**
Whatsapp: **94897 40295** (WESLEY DEVADASON)
e-mail: **varukayinthoothan@hotmail.com**

புத்தாண்டு வாழ்த்து BLESSED NEW YEAR 2026 அச்சிடப்பட்ட கவரில் **வருகையின் தூதன்** வாசகர் அனைவருக்கும் ஜனவரி மாதம் சாதாரண தபாலில் **ஜெப காலண்டர்** அனுப்பியுள்ளோம்.

1. **அக்கினி இறங்க வேண்டும்**
அற்புதம் நடக்க வேண்டும்
கர்த்தரே தெய்வம் என்று
ஜாதிகள் முழங்க வேண்டும்
2. எலியாக்கள் எழும்ப வேண்டும்
எலிசாக்கள் எழும்ப வேண்டும்
கர்த்தரின் வல்ல நாமம்
உயர்த்தி ஆக வேண்டும்
3. தேசத்தின் ஜனங்கள் காக்க
திறப்பின் வாயில் நிற்க
தேவன் தேடும் மனிதர்
நம்மில் யார்தான் உண்டு
4. இந்தியாவில் இயேசு நாமம்
இன்றே கூற வேண்டும்
இந்தியர்கள் பரலோகத்தின்
பாக்கியவான்களாய் மாற்றும்

தமிழ்நாடு 2026
தேர்தலுக்காக ஜெபியுங்கள்

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்.

நாம் எல்லாப் பக்தியோடும் நல் ஒழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் 1தீமோ.2:1-4.

டிசம்பர் 25 கிறிஸ்தவர்கள் இந்தியா முழுவதும் ஆலயத்திலும், பொது இடங்களிலும் கடுமையாக, மத எதிர்பாளர்களால் தாக்கப்பட்டதை காணோளி வழியாக கண்டீர்களே!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" *1யோவா.5:14,15.*

பாவத்தை முற்றிலும் அழிக்கவேண்டும்

தூய ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற நாம் நமது வாழ்வின் அனைத்துப் பாவங்களையும் விட்டுவிடுவது அவசியம். R.A.Torrey, "தூயஆவியானவர் ஒரு தூய்மையான ஆவியானவர். அவரையும் பாவத்தையும் நமக்குள் வைக்க முடியாது. ஒன்றையே தெரிந்து கொள்ளவேண்டும். அனைத்துப் பாவங்களையும்நாம்விட வேண்டும். ஒரே ஒரு பாவத்தை வைத்துக்கொண்டாலும் ஆசீர்வாதங்களுக்குப் புறம்பே ஆக்கி விடும். ஒருவர் உத்தமமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்தால் அவர் தேவனிடத்தில் தனிமையாகச் சென்று தன்னை ஆராய்ந்து பார்த்து, வாழ்வில் ஏதேனும் அவருக்குப் பிரியமில்லாதவை இருந்தால் உடனே அவற்றை விட்டுவிடவேண்டும்.

கீழ்ப்படிதலும் அர்ப்பணமும்

ஆவியால் நிரப்பப்படும் ஆசீர்வாத வாழ்வுக்கு மற்றும் திறவுகோல்கள் கீழ்ப்படிதலும் முழுவதுமான அர்ப்பணமுமாகும். அப்போஸ்தலர் *5:32* ன்படி தேவன் தமது ஆவியானவரை அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அளிக்கிறார். Torrey என்பவர்: "கீழ்ப்படிதலின் இருதயம் சித்தத்திலிருக்கிறது, கீழ்ப்படிதலின் சாரம் தேவசித்தத்திற்கு நமது அர்ப்பணம் தேவை. இது தேவனிடம் சென்று,பரலோக பிதாவே, இதோ நானிருக்கிறேன். நான் உமது உடைமை. நீர் ஒரு விலை கொடுத்து என்னை வாங்கியிருக்கிறீர். உம்முடைய உரிமையை ஒப்புக்கொண்டு, என்னையும் எனக்குள்ள யாவற்றையும் உமக்கு அர்ப்பணிக்கிறேன். நீர் சித்தம் கொள்ளும் இடத்திற்கு என்னை அனுப்பும். நீர் விரும்புவதை என்னில் நிறைவேற்றும். நீர் விரும்புவது போல என்னை பயன்படுத்தும்" என்று ஜெபிப்பது போன்றதாகும்.

இது தூய ஆவியானவரின் ஸ்நானத்தைப் பெறுவதற்கு முக்கியமான படியாகும். அப்போது நாம் உண்மையாகவே இப்படிச் சொல்லலாம்: "என்னுடையது அனைத்தையும் பலிபீடத்தில் படைக்கிறேன்" அதற்குப்பின் ஆவியான வரைப் பெற்றுக்கொள்ள தாமதம் ஏற்படுவதில்லை. இந்த முழுமையான அர்ப்பணம் அனேகரால் நிறைவேற்றப்பட்டு ஆசீர்வாதம் பெற முடியாமலிருக்கிறது. மக்கள் இருதயத்தின் எல்லா அறைகளையும் தேவனுக்கு எதிராகப்பூட்டாமலிருக்கிறார்கள், ஆயினும் சிலர் பூட்டி சாவியை வைத்துக்கொண்டு ஆசீர்வாதங்களை இழந்து நிற்கிறார்கள்.

இயேசுவை விசுவாசத்துடன் நோக்குங்கள்

இயேசு நாம் அவரிடம் வந்து, அவர் தந்திருக்கும் விலையேறப்பெற்ற ஈவுக்காக அவர் மீது நம்பிக்கை வைக்க அழைக்கிறார். "பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" யோவா.*7:37,38.* மேலும் மாற்கு *11:24*-ல் "ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்" என்று ஆண்டவர் கூறுகிறார்.

இது நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டிய காலம். ஆவியைப் பெற்றுக் கொள்ள ஜெபிக்க வேண்டிய காலம். ஆண்டவரே எங்களை நிரம்பி வழியும் அனுபவத்தில் நடத்தி அதன்மூலம் உமது நாம மகிமைக்காக வாழ்ந்து உமது அன்பை சுற்றிலுமுள்ள மக்களுக்கு பகிர்ந்து கொள்ள உதவி செய்யும்.

பரிமாற்றம் செய்யப்பட்ட வாழ்வு

The exchanged life

J.Hudson Taylor (1832-1905)

சீனா உள்நாட்டு மிஷனை ஸ்தாபித்தவர் ஹட்சன் இன்று அந்த மிஷன் OMF International என்று அழைக்கப் படுகிறது. இது அவரால் *1869*-ல் பிரிட்டனில் வாழ்ந்த சகோதரிக்கு எழுதப் பட்டது.

கடந்து சென்ற மாதங்கள் வாழ்வில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியானவை. எனது உள்ளம் சொந்த வாழ்விலும் ஊழியகளத்திலும் அதிக பரிசுத்தம், வல்லமை இவை தேவை என்பதை உணரச்செய்தன. ஆனால் சொந்த தேவை அதிக முக்கியத்துவமாயிருந்தது. தேவனுக்கு இன்னும்அதிக நெருக்கமாக வாழாமலிருப்பது நன்றிக்கேடு, பாவம், ஆபத்து என்பதையெல்லாம் உணர்ந்தேன். நான் வியாகுலப்பட்டு ஜெபித்தேன். உபவாசம் பண்ணி, பிரயாசப்பட்டு, தீர்மானங்களை எடுத்து, வேத வசனங்களை அதிகமாய் வாசித்து, தியானிக்க அதிக சமயம் எடுத்துக்கொண்டேன், ஆனாலும் எந்த பயனும் ஏற்படவில்லை.

ஒவ்வொருநாளும், ஏறக்குறைய எல்லா மணிநேரமும் பாவத்தின் உணர்வு என்னை மிகவும் அழுத்தியது. ஆண்டவருக்குள் நிலைத்திருந்தால் மட்டுமே எல்லாம் சரியாகிவிடும் என்று அறிந்திருந்தும் என்னால் முடியவில்லை. ஜெபத்தோடு நாட்களை ஆரம்பித்து, ஒரு வினாடிகூட கண்களை அவரை விட்டு விலக்கவேகூடாது என்று எண்ணினாலும், கடமைகளின் அழுத்தமும், சோதனைகளும், தொடர் தடைகளும் அடிக்கடி அவரை மறக்கச்செய்தன. உடல் நரம்புகளும் சூழ்நிலைகளால் தூண்டப்பட்டு கடினமான சிந்தனைகளும், இரக்கமற்ற வார்த்தைகளும் கட்டுப்படுத்த முடியாதவைகளாகிவிடுகின்றன. ஒவ்வொரு நாளும் பாவம், தோல்வி, வல்லமையின்மை போன்றவை தொடர் கதையாகி விடுகின்றன. விருப்பம் இருந்தும் அவற்றினை நிறைவேற்றக் கூடாமலிருந்தது.

இதற்கு ஒரு விடுதலை இல்லையா? எனக்கேள்வி எழுந்தது. கடைசி மட்டும் இப்படியே தொடருமா? வெற்றிக்கு பதிலாக தோல்விதான் கிடைக்குமா? நான் என் வார்த்தைகளைக் கேட்பவர்களுக்கு எப்படி உத்தமமாயிருப்பது? அவருடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்திருக்கும் போது *(யோவா.1:12)* அவரைப் போல வாழ என்னால் முடியவில்லையே!

பெலனுள்ளவனாக வாழ்வதற்குப் பதிலாக பலவீனமடைந்தேன். பாவத்திற்கு எதிராகப் போராட வல்லமையிருக்கவில்லை. எனது விசுவாசமும், நம்பிக்கையும்கூட தாழ்வு நிலைக்கு வந்துவிட்டன. நான் என்னையே வெறுத்தேன். நான் செய்த பாவத்தை வெறுத்த போதும் அதற்கு எதிரான பெலன் இல்லாதிருந்தேன். நான் தேவனது பிள்ளை என்ற உணர்வு எனக்கிருந்தது. எனவே எனக்குள்ளிருந்த ஆவி 'அப்பா, பிதாவே' *(ரோமர் 8:15-16)* என கதறினாலும் அவரது பிள்ளை என வாழும் தகுதியில் நான் வல்லமையற்றிருந்தேன்.

துக்கரமான வல்லமை குறைவு

இதுதான் என் ஆத்துமாவின் நிலையாக இருந்தது. அதன் முடிவு நம்பிக்கையின்மையாயிருந்தது. ஆயினும் அந்நிலையில் கிறிஸ்து எனக்கு விலையேறப்பெற்றவராகத் தென்படவில்லை. அவர் என்னைப் போன்ற ஒரு பாவியை இரட்சிப்பார் என்ற எண்ணமுமில்லை. ஆயினும் சிலவேளைகளில் கர்த்தருடைய சமாதானமும், சந்தோஷமும் உள்ளத்தை நிரப்பியது. அவை நிலையற்றவையாயிருந்தன. ஆனால் இந்த நிலையை தேவன் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்.

எனக்குத் தேவையெல்லாம் கிறிஸ்து ஒருவரே என்பதில் நான் உறுதியாயிருந்தாலும், முக்கிய கேள்வி என்னவென்றால் அதைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பதுதான். அவர் ஐசுவரிய சம்பன்னர், நானோ ஏழை. அவர் பெலசாலி, நான் பலவீனன். அடிவேரிலும் தண்டிலும் ஏராளம் கொழுப்புச்சத்து இருந்தாலும், அதை எனது பலவீன சிறிய கிளை பெற்றுக்கொள்வது எப்படி? கிரமம் கிரமமாக ஒளி என்மேல் பட்டது. விசுவாசம் ஒன்றுதான் இதற்குத் தேவையானது. அவரது நிறைவினை பற்றிக்கொண்டு எனக்கு சொந்தமாக்க வேண்டும். ஆனால் அந்த விசுவாசம் எனக்கு இல்லாதிருந்தது. நான் அதற்காக மிகவும் பிரயாசப்பட்டேன், அதை பயிற்சிக்க முயன்றேன். ஆனாலும் எல்லாம் வீணாயிற்று.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்துவோடு நமது ஒன்றிப்பு

எனது வேதனையின் உச்சகட்டத்தில் Mc Carthy (மெக்கார்த்தி) என்ற அருமையான பக்தனுடைய கடிதத்திலுள்ள ஒரு வாக்கியம் எனது கண்களை மூடிய செதில்களை அகற்றியது. தேவஆவியானவர் இயேசுவோடுள்ள ஒன்றிணைப்பை வெளிப்படுத்தினார். இதற்கு முன் நான் அதை அறியாதிருந்தேன். மெக்கார்த்தியும் தோல்வியிலிருந்து ஒளியைப் பெற்றவர். இவ்வாறு அவர் எழுதினார்:

"ஆனால் விசுவாசத்தை பலப்படுத்துவது எப்படி? விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள பிரயாசப்படுவது அல்ல, உத்தமராகிய அவர்மீது சார்ந்து கொள்ளவேண்டும்".

அதை வாசித்தபோது அதைக் கண்டு கொண்டேன். "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்" 2 தீமோ. 2:13. நான் இயேசுவை நோக்கிப் பார்த்தேன். சந்தோஷம் நிரம்பி வழிந்தது. அவர் சொன்னது என்ன? "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" எபி.13:5. அவரிடம் இளைப்பாறுதல் உண்டு. நான் வீணாகப் பிரயாசப்பட்டுவிட்டேன். இனி நான் அவ்வாறு பிரயாசப்பட மாட்டேன். ஏனெனில் அவர் என்னோடு தங்கியிருக்கவும், ஒருபோதும் கைவிடாமலிருக்கவும் வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் வாக்குமாறாதவர்.

நான் திராட்சைச் செடியையும் கொடியையும் எண்ணியபோது ஒரு வெளிச்சத்தை ஆவியானவர் எனக்குள் ஊற்றினார். அவர் என்னைவிட்டு விலகாதவர் மட்டுமல்ல, நான் அவரது ஒரு அவயவம். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும்அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" எபே.5:30.

திராட்சச்செடி என்று கூறும்போது அது வேர் மட்டுமல்ல,- வேர், தண்டு, கிளைகள், கொப்புகள், இலைகள், மலர்கள், கனி எல்லாம் அடங்கியது. இயேசு இதைவிடவும் கூடுதலானவர். அவர் நிலம்,சூரிய ஒளி, காற்று மற்றும் மழை, அதோடு பதினாயிரம் மடங்கு நமது எண்ணங்களுக்கு மேலானவர். இந்த சத்தியம் எவ்வளவு மேலானது! உங்கள் புரிதலின் கண்கள் பிரகாசமடையட்டும். அப்போது கிறிஸ்துவில் நமக்கு இலவசமாக அருளப்பட்டிருக்கும் ஐசுவரியங்களை அறியவும் அனுபவிக்கவும் கூடும் எபே.1:18.

இயேசுவோடு ஒன்றிணைந்திருப்பது ஆச்சரியமானது. ஏனெனில் அவர் உயிர்த்தெழுந்து உயர்த்தப்பட்டவர். அவர் ஐசுவரிய சம்பன்னராயிருக்கும்போது, நான் தரித்திரனாயிருக்க முடியுமா? உங்கள் வலதுகரம் ஐசுவரியம் நிறைந்ததாகவும், இடதுகரம் தரித்திரமுடையதாகவும் இருக்க முடியுமா? உங்கள் தலை நல்ல போஷாக்கைப் பெறும்போது சரீரம் பட்டினியாயிருக்க முடியுமா?

ஒரு வங்கி உதவியாளர் ஒரு வாடிக்கையாளரிடம் "உங்கள் கை மட்டுமே இந்த காசோலையை எழுதியிருக்கிறது; நீங்கள் எழுதவில்லை எனவே நீங்கள் எழுதிய தொகையை நான் கொடுக்க முடியாது" என்று சொல்ல முடியுமா?

இயேசுவின்நாமத்தில்ஏறெடுக்கப்பட்ட எந்த ஜெபமும் புறக்கணிக்கப்படுவதில்லை. அவரோடு இணைந்து நாமிருக்குமட்டும் அவரிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படுவது உறுதி.

வேதவசன அடிப்படையில்லாமலோ அவரது சித்தமின்றியோ ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்; நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்ட வைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" 1யோவா. 5:14,15.

கிறிஸ்துவோடு நம்மை முழுமையாக அடையாளப்படுத்துதல்

ஆண்டவர் என்னை, எப்படி எங்கு வைத்தாலும் அதுவே எனக்கு நிறைவானது. எளிதான நிலையோகடின பாதையோ அவரது கிருபை போதுமானது. என்வேலைக்காரனிடம் ஏராளம் பணம் கொடுத்து அனுப்பினாலும் சிறிதளவு கொடுத்து அனுப்பினாலும் அது தேவைக்கேற்றதாயிருக்கும். அது போல அதிக குழப்பமான சூழ்நிலையில் அதற்கேற்ற வழிநடத்துதலும் கிருபையும் கிடைக்கும்.

அவரது ஆதாரங்கள் எனக்குரியவை. ஏனெனில் அவர் என்னுடையவர். அவர் என்னோடும் என்னிலும் வாசம் செய்கிறார். இவையெல்லாம் விசுவாசி கிறிஸ்துவில் ஒன்றிணைந்திருப்பதால் பெறப்படுகின்றன. இவ்வாறு கிறிஸ்து என்னில் விசுவாசத்தின் மூலம் வாழுவதால் நான் மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன்.

சேவைக்கான ஆவியின் வல்லமை

The spirit's power for service

D.L.Moody (1837-1899)

யோவான் 7-ம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கை வைத்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறவனிடமிருந்து "*... அவனிடத்திலிருந்து ஜீவனுள்ள நதிகள் ஓடும்*" வச.38.

கிணறு தோண்டுவதற்கு இரண்டு வழிகளிருக்கின்றன. நான் சிறுவனாயிருக்கும் போது, நியூ இங்கிலாந்தில் பயன்படுத்திய கிணறு ஒரு பழைய மரத்தாலான ஒரு பம்பை உடையது. நான் அதை உபயோகித்து கன்று காலிகளுக்கும் உடலை சுத்தப்படுத்துவதற்கும் பயன்படுத்தினேன். பல வேளைகளில் பம்ப் பண்ணுவதால் கைகளைத்துப் போய்விடும். இப்போது புதிய முறை பயன்படுத்தப்படுகிறது. அதிக ஆழம் தோண்டி செங்கல் கட்டி பம்பினை உள்ளே வைப்பதை விட்டு விட்டு இப்போது களிமண், மணல், பாறை இவற்றைத்தாண்டி அடிமட்ட நீர் என்று கூறப்படும் இடம் வரைக்கும் தோண்டிவிடுகிறார்கள். பின்பு ஆர்ட்டீஷியன் ஊற்று மூலமாக ஆழத்திலிருந்து தண்ணீர் மேலெழும்புகிறது.

தேவன் அவரது பிள்ளைகள் அனைவரும் ஒருவகையான ஆர்ட்டீஷியன் ஊற்றுகளாயிருக்க விரும்புகிறார். அவர்கள் தானாக பாய்ந்துவரும் ஊற்றுகளாயிருப்பது அவரது விருப்பம். அநேக ஊழியர்கள் பிரசங்க மேடைகளில் இன்று பம்ப் பண்ணிக்கொண்டேயிருக்கிறார்கள். நானும் பலவேளைகளில் அப்படிச் செய்ய வேண்டியவனாயிருந்தேன். ஊழியக்காரர்கள் பிரசங்க மேடைகளில் பேசிக்கொண்டேயிருப்பார்கள். மக்கள் தூங்குகிறார்கள். அவர்களை எழுப்பிவிட முடிவதில்லை காரணம் என்ன? அங்கு ஜீவதண்ணீரில்லை. எப்படி பம்ப் பண்ணினாலும் தண்ணீர் வரமுடியாது. ஏனெனில் அது வெறுமையானது.

சேவைக்காக தேவஆவியானவர் நம்மீது தங்கும்போது நாம் அபிஷேகிக்கப்படுகிறோம். அப்போது நாம் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். தாகமுள்ளவன்மேல் தண்ணீரை ஊற்றுவேன் (ஏசா.44:3) என்பது தேவ வசனம். எத்தனை மகிமையான எண்ணம்! "... நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள்திருப்தியடைவார்கள்" மத்.5:6.

வழிந்து ஓடும் நீரோடைகள்

நீங்கள் ஜீவதண்ணீரால் நிரம்ப வேண்டும். அப்படி கொள்ள முடியாமல் நிரம்புவதால் வெளியே சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். ஒருவன் நிரம்பி, கொள்ள முடியாமல் இருக்கும் போது அவன் தானாகவே தேவசேவைக்கு ஆயத்தமாகிவிடுகிறான்.

தேவஆவியானவர் நம்மில் தங்கும் போது உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றின் மேல் நமக்கு வெற்றி உண்டு. நமது எல்லா தீயகுணங்கள் மேலும் வெற்றி உண்டு. இவற்றை நாம் நமது கால்களின் கீழ் மிதிக்கும் போது மக்கள் நம்மிடம் வந்து இந்த வல்லமை எங்கிருந்து கிடைத்தது? எனக்கும் இது வேண்டும் என்று கேட்பார்கள்.

இரவு முழுதும் உழைக்கிறோமா? நாம் வலையை வலதுபுறமாகப் போடுவோம். ஆண்டவர் நமது பாவங்களை மன்னித்து உன்னதத்திலிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் பெலனால் இடைகட்டுவாராக. ஆனால் இந்த வல்லமையை அவர் சுயநலநோக்கமுள்ள அல்லது பேராசையுள்ள ஒருவருக்கு அளிப்பதில்லை. அவன் சுயம், பெருமை, லௌகீக சிந்தனை ஆகியவற்றிலிருந்து விடுபடவேண்டும். நாம் தேவ மகிமையைத் தேடுவோம். அப்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். ஆசீர்வாதங்கள் முழுமையாயிருக்கும்.

பரலோக அளவைக் குறித்து அறிவீர்களா? லூக்.3:38 ன்படி அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படியான அளவு. அந்த அளவைப் பெற நாடுங்கள். ஏனெனில் அது பிதாவினுடைய விருப்பம் 12:32.

அவர் இந்த உலகில் நாம் பிரகாசிக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் பணிக்காக நம்மை உயர்த்துவது அவரது எதிர்பார்ப்பு. அவரது குமாரனுக்காக நாம் சாட்சியாயிருக்க நம்மைக் கேட்கிறார். இந்த உலகில் நாம் அவருக்கு சாட்சியாக இருக்க அவர் நம்மை வைத்திருக்கிறார். கொள்ளவும், விற்கவும் லாபம் ஈட்டவும் மாத்திரம் வைக்கவில்லை. அவரை நாம் மகிமைப்படுத்த வேண்டும். ஆவியின் நிறைவு இல்லாமல் அதனை எப்படி நிறைவேற்ற முடியும்?

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" அப்.1:8. இயேசுகிறிஸ்து மகிமையடைந்து பத்து நாட்களுக்குப் பின்பு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு இறங்கினார். இந்நாட்களில் சிலர் இந்த தேவவல்லமையைக் குறித்து கேள்வி எழுப்பலாம். அந்த நாளைக்குப் பிறகு தூய ஆவியானவர் ஒருபோதும் இவ்வித வல்லமையோடு இறங்கிவரவில்லை என்றும் இனி அவ்வாறு வரப்போவதில்லை என்றும் கூறுகிறார்கள்.

புதிய கிருபைகள்

அப்போஸ்தலர் நடபடிகள் 4:31-ஐ திருப்பும் போது இரண்டாம் முறையாக தூய ஆவியானவர் அவர்கள் கூடியிருந்த இடத்தில் இறங்கி வந்தபடியால் அந்த இடம் அசைந்தது என்றும் அவர்கள் எல்லாரும் இந்த வல்லமையால் நிரப்பப்பட்டார்கள் என்றும் வாசிக்கிறோம். நாம் ஒழுகுகிற பாத்திரங்களாயிருக்கிறோம். நாம் நீரூற்றாகிய கிறிஸ்துவின் அடியில் எப்போதும் புதிதுபுதிதாக நிரம்பும்படி காத்திருக்க வேண்டும். ஆனால் நமது தவறு என்னவென்றால் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நாம் பெற்ற கிருபையை பயன்படுத்திக் கொண்டே இருக்கிறோம். நமக்கு வேண்டியதோ புதிய கிருபை, புதிய அபிஷேகம் மற்றும் புதிய வல்லமையாகும். நாம் முழு மனதோடு தேடினால் இவற்றை நிச்சயமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆதிக்கிறிஸ்தவர்கள், இந்த வல்லமைக்காகக் காத்திருக்கப் போதிக்கப்பட்டார்கள். பிலிப்பு சமாரியாவுக்குச் சென்றார். சமாரியாவில் பெரிய வேலை நடந்து அனேகர் மனந்திரும்பியதாக எருசலேமுக்கு செய்தி வந்தது. பேதுருவும் யோவானும் புறப்பட்டுச் சென்று மனந்திரும்பியவர்கள் மேல் கைகளை வைத்த போது அவர்கள் ஊழியம் செய்வதற்கான வல்லமையைப் பெற்றுக்கொண்டார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவ ஆவியைப் பெற்று, தேவபணியில் அவரது சபையைக் கட்டி அவரது மகிமையைப் பெருகச்செய்ய அவர் நம்மை பயன்படுத்தும்படி அவரது ஆவிக்காகக் காத்திருக்க வேண்டும்.

இந்த அறிவை சபை ஒதுக்கி வைத்துவிட்டு வல்லமையை இழந்து நிற்கிறது. எண்ணிக்கை பெருகினாலும், வல்லமை பெருகவில்லை. நாம் தேவ ஆவியால் அபிஷேகிக்கப்பட்டால் நம் மூலமாக ஏராளமானோர் வல்லமை பெறுவார்கள்.

தாகமுள்ளவன்மேல் தண்ணீர் ஊற்றப்படும்.

இன்று சபையிலுள்ள அனேகர் வனாந்தரத்தைப் போல வறண்டு, உயிரற்று காணப்படுகிறார்கள். அவர்கள் தேவ ஆவியால் நிரப்பப்பட்டவர்களின் அருகில் வாழ்ந்தாலும் ஆசீர்வாதமற்றிருக்கிறார்கள். இந்த வேறுபாட்டிற்கான காரணம் என்ன? ஏனெனில் தேவன் தாகமுள்ளவன்மேல் தண்ணீரை ஊற்றுகிறார். ஒருவர் அபிஷேகத்தைத் தேடி அதனைப் பெற்றுக்கொள்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக இதை வாஞ்சிக்கும் போது தேவன் அதைத் தருவார். மிகப்பெரிய கேள்வி என்னவெனில் நாம் அதை வாஞ்சிக்கிறோமா? என்பதுதான்.

முதலாவது நான் இங்கிலாந்து சென்று வேதபாடம் நடத்தியபோது அநேக ஊழியக்காரர்கள் அங்கிருந்தனர். ஆங்கில இறையியல் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. எனவே அவர்களது பிரமாணத்துக்கு மாறாக நாம் போய் விடுவோமோ என பயப்பட்டேன். குறிப்பாக சேவைக்கு தூய ஆவியானவரின் வரம் என்பதில் குழப்பமடைந்திருந்தேன். ஒரு சிறந்த ஊழியர் தன் தலையை கரங்களுக்குள் வைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார். அவர் நான் கூறியவற்றால் கலக்கமடைந்திருப்பதாக எண்ணினேன். நான் பேசி முடிந்ததும் அவர் தனது தொப்பியை எடுத்துக்கொண்டு சென்று விட்டார். அவரை இனிநான் பார்க்க முடியாது என எண்ணிக்கொண்டேன். அடுத்த இருநாட்கள் அவர் வரவில்லை. எனவே எனது போதனை அவரைத் துன்புறுத்தி விட்டதாக மனதில் எண்ணினேன். அடுத்த இரண்டு நாட்கூடுகையிலும் அவர் வரவில்லை. நான் போதித்தவை அவரைப்புண்படுத்திவிட்டதாக எண்ணிக் கொண்டேன்.

சிலநாட்களுக்குப் பின்பு ஒரு பெரிய மத்தியான ஜெபக்கூடுகையில் அவர் எழும்பி நின்றார். அவருடைய முகம் மோசே தேவனோடு பேசிவிட்டு மலையிலிருந்து இறங்கியபோது பிரகாசித்தது போல பிரகாசித்துக்கொண்டிருந்தது. அவர் புதிய வல்லமையை பெற்றுக்கொண்டால் சுவிசேஷத்தை நன்கு பிரசங்கிக்க முடியும் என்பதை வேதபாட வகுப்பில் கற்றுக்கொண்டதாகக் கூறினார். எனவே அவர் வீட்டில் சென்று தேவனோடு போராடினார். தனது வாழ்வில் தாம் அறியாத பாவங்களை தேவன் காண்பிக்கும்படி கதறினார். தன்னை அவர் வெறுமையாக்கிய போது தேவன் தமது ஆவியால் அவரை நிரப்பினார். 'தேவன் என் ஜெபத்தைக் கேட்டார்' என்றார் அவர்.

ஆறுமாதங்களுக்குப் பின் அவரை எடின்பரோவில் சந்தித்தேன். அப்போது அவர் தாம் ஒவ்வொரு இரவும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாகக் கூறினார். நான்கு மாதங்களுக்கு முன்பாகவே வெவ்வேறு சபைகளில் பிரசங்கிக்கும் அழைப்புகள் வந்தன. வந்தவர்கள் அனைவரும் ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றனர். முப்பது நாட்களுக்குள் கட்டிடம் நிரம்பி வழிந்தது. அவர் ஜீவ தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தார். அதைத் தேடிக் கொண்டு மக்கள் திரள் கூட்டமாகக் கூடினர்.

இன்னொரு வயோதிப ஊழியக்காரர் என் நினைவுக்கு வருகிறார். அவர்: "எனக்கு இதய வியாதி இருக்கிறது. எனவே ஒரு வாரத்தில் ஒருமுறைதான் என்னால் பிரசங்கிக்க முடியும்" என்றார். அவர் மக்களை சந்திப்பதற்கும் பிரசங்கிப்பதற்கும் துணையாக ஒருவரை வைத்திருந்தார். இந்த அபிஷேகத்தைக் குறித்து கேள்விப்பட்ட அவர் "எனக்கும் இந்த அபிஷேகம் உடனே வேண்டும், நான் அடுத்தமுறை பிரசங்கிக்க வாய்ப்பு கிடைக்கும்போது இந்த வல்லமையோடு பிரசங்கிக்க வேண்டும்" என்றார். தேவன் தம்மை ஆவியால் நிரப்பும்படி அவர் ஜெபித்தார்.

சில நாட்களுக்குள் அவரை மீண்டும் சந்தித்தேன். "நான் ஒரு வாரத்தில் எட்டுமுறை பிரசங்கித்திருக்கிறேன், அனேகர் மனந்திரும்பினார்கள்" என்று அவர் சாட்சி சொன்னார். முதலாவது அவர் கடினமாக உழைத்தார். ஓய்வு இல்லாத இயந்திரம் போல அவர் உழைப்பு இருந்தது. அது வல்லமை இல்லாத ஊழியம்.

தேவன் தமது ஊழியக்காரர்களை அபிஷேகிப்பாராக. போதகர்கள் மட்டும் அல்ல தாய்மார்கள் கூட ஆவியால் நிரப்பப்படவேண்டும். ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களும் அனைவரும் இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதைப் பெற்றுக்கொள்ளும் வரை இளைப்பாற வேண்டாம். இதுவே நமது உயரிய வாஞ்சையாக இருந்தால் தேவன் நிச்சயமாக பதிலளிப்பார். "தேவனே உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் நான் இளைப்பாறமாட்டேன்" என்று ஜெபியுங்கள்.

விசுவாசியில் தூய ஆவியின் வல்லமை

The Holy spirit's power in the believer

R.A.Torrey

"வல்லமை தேவனுடையது" சங்.62:11. தேவனுடைய இந்த வல்லமையை தனிப்பட்ட விசுவாசிக்குப் பகிர்ந்து அளிப்பவர் தூய ஆவியானவர். தேவனுடையதை எடுத்து விசுவாசிக்கு சொந்தமாக்குவது ஆவியானவரின் பணி. அனைத்து தேவனுடைய வல்லமையும் கிறிஸ்துவில் தேவபிள்ளைகளுக்குப் பிறப்புரிமையாகிவிடுகிறது. ஆனால் கிறிஸ்துவில் நமக்குப் பிறப்புரிமையாயிருப்பவை நமக்கு உண்மையாகவும் பரிசோதனை முறையிலும் சொந்தமாக்கப்பட தனிநபர்களில் தூய ஆவியானவர் கிரியை செய்யவேண்டும்.

கிறிஸ்துவில் தேவன் நமக்கு அளித்திருக்கும் வல்லமையின் நிறைவு வாழ்விற்கும் சேவைக்கும் கிடைக்க, நாம் அவரைப் புரிந்து கொண்டு கேட்க வேண்டும். மனிதரில் தூய ஆவியானவரின் கிரியைக் குறித்து அறிந்துகொள்ள வேதவசனத்தினைக் கற்றுக்கொள்ள பிரயாசப்படுவோம்.

1. தூய ஆவியானவர் இயேசுகிறிஸ்துவையும் அவரது மகிமையையும் வெளிப்படுத்தும் வல்லமையுடையவர்:-

"ஆதலால் தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவானவர் சபிக்கப்பட்டவரென்று சொல்ல மாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" 1கொரி.12:3.

ஆவியானவரின் வரவைக் குறித்து இயேசுவானவர் இவ்வாறு கூறினார்: "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்து சாட்சிகொடுப்பார்" யோவா.15:26. தூய ஆவியானவர் கிறிஸ்துவைக் குறித்து அவர் சாட்சி கொடுக்கும் போதுதான் ஜனங்கள் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்ள நாம் ஆட்களை அனுப்பலாம். ஆனால் தூய ஆவியானவர் அந்த வார்த்தைகளை ஒளியூட்டினால் மட்டுமே ஜனங்கள் கிறிஸ்துவைப் பற்றிய ஜீவனுள்ள உண்மையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே ஜனங்கள் இயேசுவைக் குறித்த சத்தியத்தைக் கண்டுகொள்ள உங்களைச் சார்ந்து கொண்டு உங்கள் சொந்த வலிமைகளை பலவந்தமாக வெளிக்காட்டாமல் தூய ஆவியானவர் மேல் சார்ந்து கொண்டு, அவருடைய சாட்சியை நாடுங்கள்.

2. தூய ஆவியானவர் உலகத்தினர் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தும் வல்லமையுடையவர்:-

"அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாத படிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்ட தினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்" யோவா.16:8-11.

இயேசுவையும் அவரது மகிமை மற்றும் நீதி ஆகியவற்றைக் காண்பிப்பதால் தூய ஆவியானவர் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்த முடிகிறது. தூய ஆவியானவர் கண்டித்து உணர்த்தும் பாவத்தைப் பாருங்கள். "... பாவத்தைக் குறித்து ஏனெனில் அவர்கள் என்னை விசுவாசிக்காதபடியால்". நாம் ஜனங்களுடைய பாவத்தைக் கண்டித்து உணர்த்த முடியாது. அது பரிசுத்த ஆவியானவருடைய வேலை. நீங்கள் விவாதிக்கலாம், ஆனால் தோல்விதான். தூய ஆவியானவர் வெகுவிரைவில் அதைச் செய்துவிடுவார்.

ஆனால் நம் மூலமாகவே ஆவியானவர் இதை உருவாக்குகிறார். யோவா.16:7-8 வசனங்களைப் படியுங்கள். "... அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர்வந்து பாவத்தைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்". நாம் வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும். பாவத்தைக் கண்டிக்க ஆவியானவரை நோக்கிப் பார்க்க வேண்டும் (அப்.2:4-37) படிக்க.

3. தூய ஆவியானவர் ஜனங்களை புதிதாக்கி மறுரூபப்படுத்துகிறார்:-

"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம், அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" தீத்து.3:5.

மறுஜென்மமடையச் செய்வது தூய ஆவியானவரின் பணி. அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்த ஒருவரை உயிர்ப்பிக்க அவரால் கூடும். மனம் தேவசத்தியத்திற்குக் குருடாகி, சித்தம் தேவனுக்கு விரோதமாகப் பாவத்திலிருந்து, எண்ணங்களெல்லாம் கேடான வைகளும் ஊழல் நிறைந்தவைகளுமாயிருக்கின்ற ஒருவரை மாற்றமடையச் செய்து, தேவனுடைய சிந்தையைப் பகிர்ந்தளித்து அவன் தேவசிந்தையோடு தேவசித்தத்தை தன் சித்தமாக்கி தேவனில் அன்புகூர்ந்து அவர் வெறுப்பதை வெறுக்கச் செய்வார்.

தூய ஆவியானவர் கிரியை செய்யாமல் எந்த பிரசங்கமும், பாரம்பரியமும், புதுப்பித்தலைக் குறித்த கல்வியும் பயனளிப்பதில்லை. நீதிமான்களாக்கப்படுவதற்கு கிறிஸ்துவை நாம் சார்ந்திருப்பது போல நாம் புதுப்பிக்கப்படுவதற்கு தூய ஆவியானவரை சார்ந்து கொள்ள வேண்டும்.

4. நிலைத்திருப்பதும் நித்தியமானதுமான திருப்தியை அளிக்க தூய ஆவியானவர் வல்லவராயிருக்கிறார்:-

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ, ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" யோவான் 4:14.

இங்கு தண்ணீர் என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. உலகம் ஒரு போதும் நம்மைத் திருப்திப்படுத்துவதில்லை. உலக சந்தோஷங்களைக் குறித்து: "இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு இன்னும் தாகம் உண்டாகும்" என்று சொல்லலாம். ஆனால் தூய ஆவியானவர், வாஞ்சிக்கிற எந்த ஆத்துமாவினையும் திருப்தியாக்கும் வல்லமையுடையவர். தூய ஆவியானவர் ஒருவரே மனித இருதயத்தை திருப்திப்படுத்தக் கூடியவர். தூய ஆவியானவர் உங்களில் பாய்ந்துவர அனுமதித்தால் நீங்கள் ஒருபோதும் தாகமடைவதில்லை. ஆவியானவர் தமது ஜீவதண்ணீரை ஆத்துமாக்களில் ஊற்றும் போது சந்தோஷமும், விவரிக்கமுடியாத திருப்தியும் ஏற்படுகின்றன. இந்த ஜீவநீரூற்று உங்களில் இருக்கிறதா? இந்த நீரூற்று தடைபடாமலிருக்கிறதா? நித்திய ஜீவனுக்கேதுவாய் அது ஊறிக்கொண்டே இருக்கிறதா?

5. பாவம் மரணம் என்ற பிரமாணங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் வல்லமை தூய ஆவியானவரிலுண்டு:-

"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" ரோமர் 8:2.

நம் அனைவருக்கும் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணம் தெரியும். நாம் அவற்றின் கட்டில் இருக்கிறோம். தேவன் ஒரு வழியை இதிலிருந்து தப்பிக்க தந்திருக்கிறார். அந்த வழி பரிசுத்த ஆவியின் வல்லமையின் வழி. நாம் நம்பிக்கை அற்றவர்களாக இந்த பிரமாணங்களை மேற்கொள்ள பிரயாசப்படுகிறோம். சரியாக வாழ மாம்ச பலத்தை பயன்படுத்துகிறோம். இந்த நம்பிக்கையற்ற நிலையில் தூய ஆவியானவரின் உதவியை நாடுவோம். அவரோடு வாழ்ந்து நடக்கும்போது அவரது ஆசீர்வாதமான வல்லமை நம்மை பாவம் மரணம் ஆகியவற்றின் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது.

ரோமர் 7-ம் அதிகாரத்தில் காணப்படும் அனேக பேர்க்கிறிஸ்தவர்கள் இன்று உண்டு. அனேகர் சாதாரண ஒரு கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து தொடர் தோல்விகளையே சந்திக்கிறார்கள். நம்மில்தானே நாம் பாவத்தின்கீழ் மாம்சத்திற்கு விற்கப்பட்டுவிட்டோம். நம்மை நாமே தப்புவிக்க முடியாது. தூய ஆவியானவர் நாம் செய்ய இயலாத வைகளைப் பொறுப்பெடுத்துச் செய்கிறார் ரோமர் 8:2-4.

ரோமர் 8-ம் அதிகாரத்தில் ஒரு உண்மைக் கிறிஸ்தவ வாழ்வின் படத்தைப் பார்க்கிறோம். அது நம்மால்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்துகாட்டக்கூடியதும் தேவன் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்ப்பதுமாகும். இந்த விதமான வாழ்வு 7-வது அதிகாரத்தில் வருவது போல மட்டுமல்ல இந்த வல்லமையின் ஆவி கீழ்ப்படிதலையும் வெற்றியையும் கொண்டு வருகிறது. மாம்சம் இன்னும் நம்மிலிருந்தாலும் நாம் மாம்சத்தில் இருக்கவில்லை. நாம் ஆவியால் நடத்தப்படுகிறோம். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள் 8:13. "... ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" கலா.5:16.

ஆவியின் வல்லமையால் அனுதினமும், நிமிடந்தோறும் தொடர் வெற்றியை மாம்சத்தின் மேலும் பாவத்தின் மேலும் பெறுவது நமது சிலாக்கியம். ஆனால் இந்த வெற்றி நமது சொந்த பெலத்தில் உள்ளதல்ல. தேவ ஆவியின்றி நமது சுயத்துக்கு விடப்பட்டால் நாம் உதவியற்றவர்களாகிவிடுவோம். எல்லாம் ஆவியின் வல்லமையால்தான் நடைபெறுகிறது.

தூய ஆவியானவர் உங்களை பாவம் மரணம் ஆகியவற்றின் பிரமாணத்திலிருந்து விடுதலை பண்ணியிருக்கிறாரா? அதை அவர் இப்போதே செய்ய அனுமதிப்பீர்களா? **'பாவம் மரணம் என்ப வற்றின் பிரமாணத்திலிருந்து'** விடுபட எடுக்கும் சுய முயற்சியை விட்டுவிடுங்கள். பாவம் செய்வதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். உங்களை விடுதலை பண்ண தூய ஆவியானவருக்கு வல்லமை உண்டு என்று விசுவாசியுங்கள். அதை அவர் செய்ய உங்களை அவரிடம் ஒப்புவியுங்கள். நிச்சயமாக அவர் அதைச் செய்வார். அப்படிச் செய்யும் போது வெற்றியுடன் பவுலுடன் சேர்ந்து இப்படிக் கூறலாம்: கிறிஸ்து இயேசுவிலுள்ள ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் ஆகியவற்றின் பிரமாணத்திலிருந்து விடுதலை ஆக்கிற்று.

6. உள்ளான மனிதனில் (விசுவாசிக்கு) தூய ஆவியானவர் வல்லமை அளித்து பலப்படுத்துகிறார்:-

"நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்..." எபேசி.3:16.

இவ்வாறு பலப்படுத்தப்படுவதின் விளைவை 17-19 வசனங்களில் பார்க்கலாம். இங்கே ஆவியின் வல்லமை நமக்கு பாவத்தின்மேல் வெற்றி தருவதோடு (a) கிறிஸ்து நமது உள்ளங்களில் வாசம் பண்ணுவதையும், (b) நாம் "அன்பில் வேருன்றி நிலைத்திருப்பதையும்" (c) நாம் சகல பரிசுத்தவான்களோடும்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து கொள்ளவும்" கூடும். இவையெல்லாம் 'தேவனுடைய பரிபூரணத்தினால் நிரப்பப்படும் போது' நடைபெறுகின்றன.

7. நம்மை ஒரு பரிசுத்த வாழ்வுக்கு நடத்தவும் 'தேவனுடைய புத்திரர்' என்ற நிலையில் தேவனைப்போல வாழவும் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார்:-

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" ரோமர் 8:14.

நாம் ஒரு பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு மட்டுமல்ல, அந்த வாழ்வைக் கண்டுபிடித்து அவரைப் பிரியப்படுத்தும் படி வாழ வல்லமை தருகிறார். அவர் நமது கரத்தைப் பிடித்து அந்த வாழ்விற்குள் நடத்துகிறார். நாம் செய்ய வேண்டியது நம்மை வழி நடத்தவும் உருவாக்கவும் அவரிடம் முற்றுமாக ஒப்படைப்பதுதான். அப்படிச் செய்யும் போது நாம் தேவனுடைய சந்ததி மட்டுமல்ல, ஒரே இரத்தத்தில் தோன்றப் பண்ணி (அப்.17:28) "தேவனுடைய புத்திரராக்குகிறார்".

8. விசுவாசியின் ஆவியோடு தூய ஆவியானவர், விசுவாசி ஒரு தேவபிள்ளை என்பதற்கு சாட்சியாயிருக்கிறார்:-

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று, ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" ரோமர் 8:16.

ஆவியானவர் நமது ஆவிக்கு சாட்சி கொடுப்பதாக அல்ல, - **'நமது ஆவியோடு இணைந்து'** என்று பவுல் குறிப்பிடுகிறார். இந்த வார்த்தைகள் சரியான உறுதிப்படுத்தும் வார்த்தைகள். நாம் புத்திரர் என்பதற்கு இரண்டு சாட்சிகள் உண்டு: ஒன்று நமது ஆவி நாம் தேவனுடைய புத்திரர் என சாட்சியிடுகிறது. இரண்டாவதாக - தூய ஆவியானவர் நமது ஆவியோடு சேர்ந்து நாம் தேவனுடைய புத்திரர் என சாட்சியிடுகிறார்.

எப்படி தூய ஆவியானவர் இதற்கு சாட்சியாயிருக்கிறார்? இதற்குரிய பதில் கலாத்தியர் 4:6-ல் இருக்கிறது. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

9. குணாதிசயத்தில் தேவனைப் போன்ற கிருபைகளை விசுவாசியில் பரிசுத்த ஆவியானவர் கொண்டு வருகிறார்:-

"ஆவியின்கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" கலா.5:22,23.

அழகிய குணாதிசயங்கள், உத்தமமான குழந்தை போன்ற தன்மை இவையெல்லாம் தூய ஆவியானவரின் கிரியை. அவரது **'கனி'**, அவர்தான் அதைக் கொடுக்கிறார்.

இந்த வாழ்வு நமக்கு இயற்கையானதல்ல. மேலும் எந்த **'மாம்ச'** முயற்சியாலும் இதைப் பெற முடியாது. நமக்கு இயற்கையான வாழ்வு 19-21 வசனங்களில் அடங்கியுள்ளது. உள்ளே வாசம் செய்யும் ஆவியானவருக்கு முழு கட்டுப்பாட்டையும் அளித்துவிட்டால் அவரே தங்கிவிடுவார். நாம் மாம்சத்தின் கேடான தன்மையை உணர்ந்து, நம்மில் ஆவியானவர் வாசம் பண்ண இடமளிக்கும் போது நாம் கனிகொடுக்க முடியும். அது ஆவியின் சுத்திகரிப்பு 1பேது.1:2; 2தெச.2:13.

10. தூய ஆவியானவர் விசுவாசியை 'சகல சத்தியத்திற்குள்ளும்' வழிநடத்தும் வல்லமையுடையவர்:-

"சத்திய ஆவியாகிய அவர்வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர்தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" யோவா.16:13.

மனித போதனைகள் எவ்வளவாயிருப்பினும், நமது ஆசிரியர்கள் எத்தகையவர்களாயிருந்தாலும் சத்தியத்தை சரியாக நமக்குப் புரிய வைக்க முடியாது. ஆங்கிலத்திலோ, மூல மொழிகளிலோ கருத்தாக படித்தாலும் சத்தியத்தின் நிஜ புரிந்து கொள்ளுதலைப் பெற முடியாது. தூய ஆவியானவர் மட்டுமே ஒவ்வொரு வரையும் போதிக்க முடியும்.

(தொடரும்)

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- நாம் தேவ **ஆவியால்** அபிஷேகிக்கப்பட்டால் நம் மூலமாக ஏராளமானோர் **வல்லமை** பெறுவார்கள்.
- அழகிய குணாதிசயங்கள், உத்தமமான குழந்தை போன்ற தன்மை இவையெல்லாம் தூய **ஆவியான**வரின் கிரியை.
- தேவ **ஆவியானவர்** நம்மில் தங்கும் போது உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றின் மேல் நமக்கு வெற்றி உண்டு.
- தூய **ஆவியின்** நிறைவைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற நாம் நமது வாழ்வின் அனைத்துப் பாவங்களையும் விட்டுவிடுவது அவசியம்.
- தூய **ஆவியான**வரையும் பாவத்தையும் நமக்குள் வைக்க முடியாது. ஒன்றையே தெரிந்து கொள்ளவேண்டும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason